DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | | | |
|---|---|---|---|
| Name | ரமேஷ் | Village | வாணியம்பாடி டவுன் |
| Father's Name | கோபால் கவுண்டர் | Taluk | வாணியம்பாடி |
| Age | 52 | Calling | தனியார் வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **05.02.2026**

**E.A No.2 /2023 in E.P.No.6/2021 in**
**RCOP.No.26/2015** **ம.சா.1** **12.06 PM – 12.19 PM**

**குறுக்கு விசாரணை –**

1. இந்த வழக்குசொத்தில் நான் உரிமையாளர் இல்லை என்றாலும், வாடகைதாரர் என்றாலும் சரிதான். நான்சொன்னை உயர் நீதிமன்றத்தில் போட்ட வழக்குகளான 1606/2021 மற்றும் 1607/2021 ஆகிய இருவழக்குகளும் கடந்த 14.11.2025 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல நிலுவையில் தான் உள்ளது.

2. எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் 3ம் பத்தியில் கூறியுள்ள அனைத்து விவரங்களும் பொய்யானவை என்றாலும், எதிர்மனுதாரரின் வாடகை கட்டுப்பாடு மனு இந்த நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு அது வாணியம்பாடி சார்பு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரருடைய மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டு, சென்னை உயர்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல, சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதா என்பது குறித்து எனக்கு தெரியவில்லை வக்கீலிடம் கேட்க வேண்டும்.

3. இடத்தில் உரிமையாளர் என்னிடம் ரூ.5 லட்சத்தை முன்பணமாக பெற்றுக்கொண்டுள்ளார் என்றும், அது தவிர்த்து பல்வேறு தவணைகளில் மேற்படி உரிமையாளார் என்னிடம் பெற்றுக்கொண்டுள்ளார் என்பதை காட்டுவதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன்.

4. மா.சா.ஆ.1 ஆனது நான் வாடகைதாரர் என்ற முறையில் எனக்கு வாணியம்பாடி நகராட்சியால் கொடுக்கப்பட்டுள்ளது என்றுசொன்னால் சரிதான். மா.சா.ஆ.2 மற்றும் 3 ஆகிய வரி ரசீதும், மின்கட்டண ரசீதும் எதிர்மனுதாரர் தமிழ்தென்றல் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான், அது தற்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மா.சா.ஆ.5ம் தமிழ்தென்றல் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். மா.சா.ஆ.6 ஆவணமானது சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பின் பெயரில் ஏற்கனவே தீர்மாணிக்கப்பட்ட விசயம் என்றுசொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும், சுவாதீணம் நான் கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னாலும் சரியல்ல.

***குறுக்கு விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.***

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி
வாணியம்பாடி.